முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 17.03.2026.

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>
<u>அசல் வழக்கு எண்.9/2025</u>

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அட்சயா | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | வினாயகம் | வயது | : | 37 |
| ஊர் | : | கூழமந்தல் | தொழில் | : | கூலி |

**<u>வா.சா. 1 (அட்சயா) : வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. தாவா சொத்திற்கான வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
3. வாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
4. வாதியின் ஊரக வேலை உறுதி திட்ட அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
5. தாவா சொத்திற்கு அருகிலுள்ள 1, 2 பிரதிவாதிகளின் சொத்து குறித்த கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா. ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
6. வாதி தூசி காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கு சொத்து விவரத்தில் அனாதீனம் என்று குறிப்பிட்டு உள்ளதனால் மேற்படி வீடு ரசீதானது வழக்கு சொத்திற்கு வழங்கப்படவில்லை என்ற ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/ படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.17 18:35:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு